## துன்புறுத்தலை அறிவிக்கவும்

பிள்ளையோ துணைவரோ முதியவரோ துன்புறுத்தப்படுவதைத் தடுப்பதற்குச் சிறந்த உபாயம், அதனைப் பொலிசாருக்கு அறிவிப்பதாகும்.

## பொலிசாரை அழைக்கவும்

பொலிசார் அதனை விசாரித்து, ஏற்புடையவிடத்து, வழக்கு வைப்பார்கள். வழக்கு முடியும்வரை பாதிக்கப்பட்டவர்கள் உதவி, புத்திமதி ஏற்குமிடத்து வழங்கப்படும்.

உங்கள் மதகுரு, மருத்துவர், வழக்கறிஞர், பொலிசார், பொது சுகாதார தாதி, சமூக சேவையாளர் எவருடனும் தொடர்புகொண்டு மேலதிக விபரமோ விளக்கமோ பெறலாம்.



முதியோர் வாதாட்ட நிலையம் என்பது தனியே முதியோர்க்காகவே இலவசமாக வாதாடும் நிலையமாகும்.

**புத்திமதி பெறுவதற்கு அழையுங்கள் (416) 598-2656**

**இத்தகைய குற்றம் மற்றும் பிற குற்றம் எதனையும. தடுப்பது பற்றிய மேலதிக விபரங்களுக்கு உங்கள் பொலிசாருடன் தொடர்புகொள்ளவும்.**

**ரொறொன்ரோ பொலிஸ் சேவை**

## அவசர பொலிஸ் சேவை
## 9-1-1

**அவசரம் அல்லாத பொலிசுதவி**
**808-2222**

**பொலிசாரும் சமூகமும் ஒத்துழைக்கும் சிறப்பு**

SP314-T, 1999/01
Elder Crime & Abuse (Tamil)

# முதியோருக்கு இழைக்கப்படும் குற்றம், துன்பம்



சட்டப்படி பாதுகாப்பு பெறும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. ரொறொன்ரோ பொலிஸ் சேவை அந்த உரிமையை நிலை நாட்டும் பணியைச் சிரமேற்கொண்டுள்ளது.

எமது சமூகத்தில் குற்றம் பற்றிய அச்சத்தைக் குறைப்பதற்கும், வாழ்க்கைத் தரத்தை மேம் படுத்துவதற்குமெனக் குற்றத் தடுப்புத் திட்டங் களும் மக்கள் விழிப்புத் திட்டங்களும் செயற்பட்டு வருகின்றன.

## முதியோரைத் துன்புறுத்தல் என்றால் என்ன?

ஒரு முதியவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் அல்லது அதிகாரம் கொண்டவர் அவருக்குத் தீங்கிழைக்கும் பொழுது துன்புறுத்தல் இடம் பெறுகிறது.

துன்புறுத்துபவர் முதியவரின் குடும்பத்தவராகவோ அயலவராகவோ தாதியாகவோ வீட்டுச் சொந்தக் காரராகவோ வேறு வகையில் கவனிப்பவராகவோ விளங்கலாம்.

***முதியோர் படும் துன்பம்*** கண்டறியப்படுவதும் பொலிசாருக்கு அறிவிக்கப்படுவதும் அரிது. ஆகவேதான் அது மறைக்கப்படும் குற்றம் எனப்படுகிறது.

## துன்புறுத்தும் விதங்கள்

### உடல்

- பிள்ளை முகத்தில் அறைதல்.
- தாதி தள்ளிவிடுதல், பயமுறுத்தல்.

### பணம்

- நம்பிக்கைக்குரியவர் தமக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தைத் தவறாகப் பாவித்தல்.
- முதியவரின் சம்மதமின்றியே ஒரு பிள்ளை காசோலைகளில் மேலொப்பமிடல்.

### புறக்கணிப்பு

- துணைவரைப் பலவந்தமாகத் தனிமைப்படுத்துதல்.
- உணவு கொடுக்கவும் வைத்தியம் செய்விக்கவும் மறுத்தல், மருந்தைக் கூட்டிக் கொடுத்தல்.

**இவ்வாறு இழைக்கப்படும் தீங்குகளைக் குறித்து வழக்குத் தொடரலாம்!**



## துன்புறுத்தல் அறிவிக்கப்படுவது அரிதாக இருப்பதற்கான காரணங்கள்

### துன்புறுத்தப்படுபவர்கள் தாம் துன்புறுத்தப் படுவதை அறிவியாத காரணங்கள்

- பொலிசாரோ வேறு அமைப்பினரோ தமக்கு உதவ முடியாது என்ற நினைப்பு.
- அவர்கள் தம்மை ஒரு நிலையத்தில் கொண்டு போய் விட்டுவிடக்கூடும் என்ற அச்சம்.
- தமது உரிமைகளை அறியாமை.
- தமது குடும்பத்தவர்கள் தம்மைத் துன்புறுத்துவது குறித்து அடையும் வெட்கம்.

### ஒருவர் துன்புறுத்தப்படுவதைப் பிறர் அறிவியாத காரணங்கள்:

- துன்புறுத்தப்பட்டதற்கான அறிகுறிகளை அறியாமை.
- அதற்கு என்ன செய்யலாம் என்பதை அறியாமை.
- தலையிட விரும்பாமை.

## துன்புறுத்துவதைத் தடுத்தல்

- நீங்கள் ஒரு வீட்டிலோ நிலையத்திலோ வாழ்ந்தாலும், உங்கள் உரிமைகளை அறிவதும், ஆலோசனை கேட்பதும் நலம்.
- பிற்காலம் குறித்து திட்டமிடுக. நீங்கள் எப்போதாவது எவர்மீதும் தங்கியிருக்க நேர்ந்தால், உங்கள் சொத்துப்பத்துக்குத் தத்துவம் ஏற்படுத்தவும்.
- தத்துவப் பத்திரத்தில் ஒப்பமிடுவதற்கு முன்னர், ஒரு வழக்கறிஞருடனோ பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் அலுவலகத்து அதிகாரிகளுடனோ ஆலோசிக்கவும்.
- உங்கள் சுதந்திரத்தை நிலைநிறுத்துவதற்கு ஏதுவாக, உங்கள் துணைவரின் பணிகளை அறிந்து வைத்திருக்கவும்.
- உங்கள் ஓய்வூதியக் காசோலைகள் நேரே உங்கள் வங்கிக் கணக்கில் இடப்படுவதற்கு ஒழுங்கு செய்யவும்.
- வயதுவந்த பிள்ளைகளை (குறிப்பாக குடி, போதை, பண, மனப் பிரச்சனை உள்ளவர்களை) வீடுதிரும்பி வாழ்வதற்கு அனுமதிப்பதில் எச்சரிக்கையாய் இருக்கவும்.
- எவருடனாவது போய் வசிப்பதனால் ஏற்படக் கூடிய (இடநெருக்கடி, படிக்கட்டு, சத்தம், ஆட்சியிழப்பு போன்ற) பிரச்சனைகளைப் பற்றிச் சிந்திக்கவும்.
- உங்களைக் கவனிப்பவருக்கு மேலதிக பயிற்சி அளிக்கவும்.
- வீடு பேணல், உணவு வழங்கல், அன்றாடப் பராமரிப்பு, வாகன வசதிகள் கிடைக்கும் வாய்ப்பினை அறியவும்.